**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.234/ஆ5/2024, நாள். 22.01.2024**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தேர்தல்கள் – 14வது தேசிய வாக்காளர் தினம் 2024 – ஜனவரி 25ம் தேதி கொண்டாடுவது சம்மந்தமாக – 24.01.2024 அன்று காலை 11.30 மணிக்கு தேசிய வாக்காளர் தின உறுதிமொழி ஏற்றல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.எச்2/03/2024, நாள். 19.01.2024

•••••

பார்வையில் காணும் கடிதப்படி, 14வது தேசிய வாக்காளர் தினம் 2024 ஜனவரி 25ம் தேதி கொண்டாடுவது சம்மந்தமாக 24.01.2024 அன்று காலை 11.30 மணியளவில் தேசிய வாக்காளர் தினத்தன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் இணைப்பில் கண்டுள்ள உறுதிமொழி எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் உறுதிமொழி எடுத்தமைக்கான விவரத்தினை புகைப்படத்துடன் b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – உறுதிமொழி

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

ஜனவரி 24, 2024 – 11.30 மு.ப.

# <u>வாக்காளர் உறுதிமொழி</u>

மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கருதும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம்.

.